பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21
முன்னுரை 27
நூலாசிரியரின் முன்னுரை 29
1 சரியான இறைநம்பிக்கையுடன் நற்செயல்களில் ஈடுபடுங்கள் 31
2 சொல் செயலால் சேவை செய்யுங்கள் 36
3 பயனுள்ள கல்வித் தேடலில் ஈடுபடுங்கள் 37
4 நிகழ்காலக் கடமைகளில் கவனத்தைக் குவியுங்கள் 38
5 அல்லாஹ்வை நினைவுகூருங்கள் 40
6 அல்லாஹ்வின் அருட்கொடைகள் குறித்து பேசிக்கொள்ளுங்கள் 41
7 உங்களைவிடக் கீழ்நிலையில் உள்ளவர்களைக் கவனியுங்கள் 42
8 கடந்த காலக் கசப்புகளை மறந்திடுங்கள் 43
9 எதிர்காலம் குறித்த அச்சம் நீங்க பிரார்த்தியுங்கள் 44
10 எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளுங்கள் 46
11 தீய எண்ணம், சந்தேகப் புத்தியை விடுங்கள் 47
12 அல்லாஹ்வின்மீது பொறுப்புச் சாட்டுங்கள் 48
13 குறைகளைவிட நிறைகளைப் பாருங்கள் 50
14 குறுகிய காலத்தையும் நிம்மதியாக்கப் பாருங்கள் 52
15 சோதனைகளை அஞ்சாமல் எதிர்கொள்ளுங்கள் 53
16 தவறான விமர்சனங்களைப் பொருட்படுத்தாதீர்கள் 54
17 நல்ல சிந்தனைக்கு நல்ல வாழ்க்கை 55

18 யாரிடமும் நன்றியை எதிர்பார்க்காதீர்கள் 56
19 உங்கள் இலக்கு பயனுள்ளதாக இருக்கட்டும் 57
20 தள்ளிப்போடாதீர்கள் 58
21 எது முக்கியமோ அதை முதலில் செய்யுங்கள் 58

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

✿

அஷ்ஷெய்க் அல்அல்லாமா அபூ அப்துல்லாஹ் அப்துற் றஹ்மான் இப்னு அப்துல்லாஹ் இப்னு நாஸிர் அஸ்ஸஅதீ ﵀ அவர்கள் தமீம் குலத்திலுள்ள ஸஅதீ என்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார்கள். இப்னு ஸஅதீ என்ற பெயரில் அறியப்படுகிறார்கள்.

பிறப்பும் வளர்ப்பும்

ஹிஜ்ரீ 1307 முஹர்ரம் பிறை 12இல் (கி.பி.1889) சஊதி அறேபியாவின் அல்கசிம் பகுதியிலுள்ள உனைஸா எனும் ஊரில் பிறந்தார்கள். தமது தந்தையின் மரணத்திற்குப் பிறகு குர்ஆன் ஓதத் தொடங்கி அதை நன்கு மனனம் செய்தார்கள். அப்போது அவருக்கு வயது பத்து. பிறகு தமது ஊரிலுள்ள அறிஞர்களிடமும் தமது ஊருக்கு வந்த அறிஞர்களிடமும் தமக்கான பல்வேறு இஸ்லாமியத் துறை சார்ந்த கல்விகளை மனநிறைவுடன் கற்கத் தொடங்கினார்கள்.

தமது இருபத்து மூன்றாம் வயதில் பாடம் நடத்தத் தொடங்கி விட்டார்கள். ஹிஜ்ரீ 1350இல் அந்த ஊரில் பாடம் நடத்துவதற்கு அவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற நிலை மட்டுமல்ல, ஊரில் கல்வியறிவு இல்லாதவரே இல்லை என்ற நிலையும் உருவானது. இவர்களின் பிரதான மாணவர்களில் ஒருவர்தான் ஷெய்க் இப்னு உஸைமீன் ﵀ அவர்கள்.

ஆசிரியர்கள்

ஹதீஸ் கல்வியில் தனித்திறமை பெற்றிருந்த,பேணுதல் மிக்க, ஏழைகள்மீது பாசம் கொண்ட, மழை மற்றும் குளிர் காலங்களில் ஏற்படும் குளிரைப் போக்குவதற்காக தாம் அணிந்திருக்கும் ஆடைகளில் ஒன்றை வறியவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலான ஷெய்க் இப்றாகீம் இப்னு முஹம்மது இப்னு ஜாசிர் ﵀ அவர்களிடம் ஆரம்பக் கல்வியைக் கற்றார்கள். ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் கரீம் ஷிப்லி ﵀ அவர்களிடம் அறபுமொழி மற்றும் ஃபிக்ஹ்

கல்விகளைக் கற்றார்கள். உனைஸாவின் காழீயான ஷெய்க் ஸாலிஹ் இப்னு உஸ்மான் ﵀ அவர்களிடம் தவ்ஹீது, தஃப்சீர், உசூலுல் ஃபிக்ஹ், அறபி என அவர்களிடம் இறுதிக்காலம் வரை அதிகமான கல்விகளைக் கற்றார்கள்.

ஆசிரியர்களில் சிலர்

- ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு ஆயிழ் ﵀,
- ஷெய்க் ஸஅப் அல் துவய்ஜிரீ ﵀,
- ஷெய்க் அலீ அல் சினானீ ﵀,
- ஷெய்க் அலீ நாஸிர் அபூ வாதீ ﵀ – இவர்களிடம்தான் ஸிஹாஹ் ஸித்தா எனும் ஆறு பெரும் நபிமொழி நூற்களைக் கற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஷெய்க் முஹம்மது இப்னு ஷெய்க் அப்துல் அஸீஸ் அல் முஹம்மதுல் மானிஉ ﵀ – இவர் சஊதியிலுள்ள அல்மஆரிஃ பின் நிர்வாகியாவார்.
- ஷெய்க் முஹம்மது அமீன் அல்ஷன்கீதீ ﵀ – உனைஸாவுக்கு வந்தபோது இவர்களிடம் தஃப்சீர், ஹதீஸ், அறபு இலக்கணம் போன்றவற்றைக் கற்றுக்கொண்டார்கள்.
- ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் லதீஃப் இப்னு அப்துற் றஹ்மான் ஆலுஷ் ஷெய்க் ﵀
- ஷெய்க் நாஸிர் இப்னு சஊத் இப்னு ஈசா ஷா வைமீ ﵀ – தமது தஃப்சீரை எழுதத் தொடங்கியபோது இவர்களிடமிருந்து அதிகமான பயன்களைப் பெற்றார்கள்.

முக்கிய ஆசிரியர்கள்

நபிமொழிகளை அறிவிக்க இஜாஸா எனும் முறையான அனுமதியைப் பின்வரும் ஷெய்குகளிடம் பெற்றுள்ளார்கள்:

- ஸாலிஹ் இப்னு உஸ்மான் அல்காழீ ﵀
- இப்றாஹீம் இப்னு ஸாலிஹ் இப்னு ஈசா ﵀
- முஹம்மது அல்அமீன் மஹ்மூத் அல்ஷன்கீதீ ﵀
- அலீ இப்னு நாஸிர் அபூ வாதீ ﵀
- அப்துல் ஹை அல் கத்தானீ ﵀

கல்விப்பாதை

அடிப்படை ஃபிக்ஹிலும் அதன் பிரிவுச் சட்டங்களிலும் தனித்து விளங்கினார்கள். தமது ஷெய்குகளைப் பின்பற்றி ஆரம்பக் காலங்களில் ஹன்பலீ மத்ஹபில் இருந்தார்கள். அதிலுள்ள பல அடிப்படைச் சட்டங்களையும் மனனம் செய்திருந்தார்கள். அவற்றைச் சுருக்கமாக சுமார் நானூறு பாடல்வரிகளில் அதற்கான விளக்கவுரையுடன் கூறி இருந்தார்கள். எனினும், அதை வெளியிட அவர்கள் விரும்பவில்லை. இப்னு தைமிய்யா ﵀ மற்றும் அவரது மாணவரான இப்னுல் கய்யிம் ﵀ ஆகியோரின் நூல்களிலிருந்து தவ்ஹீது, தஃப்சீர், ஃபிக்ஹ் போன்றவற்றின் பயனைப் பெறுவதிலேயே அதிகக் கவனம் செலுத்தினார்கள்.இதனாலேயே இவ்விருவரின் வழிகாட்டலினால் தமது ஹன்பலீ மத்ஹபைக் கைவிட்டு விட்டு மார்க்க ஆதாரங்களின் அடிப்படையில் தமது பாதையை அமைத்துக்கொண்டார்கள்.

தஃப்சீர் கல்வித்துறையில் இவர்களுக்கென்று தனி ஆற்றலுண்டு. இவர்கள் பல்வேறு தஃப்சீர்களை ஆய்வு செய்த பின் பல பாகங்கள் கொண்ட தஃப்சீர் ஒன்றைத் தொகுத்து எழுதினார்கள்.அப்படி எழுதுகிறபோது தன் கைவசத்தில் எந்தத் தஃப்சீரையும் வைத்திருக்கவில்லை. அவர்களின் விளக்கவுரை குர்ஆனுக்குரிய சரியான பொருளையும் பயன்களையும் கூறுகின்றது. அது பல்வேறு ஆய்வுகளின் வழியாக அதன் சொற்களின் பல்வேறு பயன்களைப் பற்றியும், அதன் சம்பவங்களைப் பற்றியும் ஆதாரங்களின் அடிப்படையில் விரிவாக விளக்குகின்றது. அதைப் படிக்கும் போதுதான் புரியும், அதன் அருமை பெருமை என்னவென்று!

தொகுப்புகள்

இவர்கள் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்கள். எனினும், அவற்றில் ஹிஜ்ரீ 1344இல் வெளியிடப்பட்டு, பல பதிப்புகளைக் கண்ட, எட்டு பாகங்களைக் கொண்ட 'தைசீர் அல் கரீமுல் மன்னான்' என்ற தஃப்சீர்தான் மிக முக்கியமான ஒன்று.

- ஹாஷியத்துன் அலல் ஃபிக்ஹ் (حاشية على الفقه) – இது ஹன்பலீ மத்ஹபைப் பற்றியது என்பதால் பதிப்பிக்கவில்லை.
- இர்ஷாது உலில் பஸாயிரி வல் அல்பாப் (إرشاد أولي البصائر والألباب) – கேள்வி பதில் வடிவில் ஃபிக்ஹ். இது ஃபிக்ஹ் சட்டங்களை

1

சரியான இறைநம்பிக்கையுடன் நற்செயல்களில் ஈடுபடுங்கள்

✿

நிம்மதிக்கான காரணிகளில் மிக அவசியமானது, அடிப்படையானது: ஈமானும் நற்செயல்களும்தான். அல்லாஹ் கூறுகிறான்:

مَنْ عَمِلَ صَالِحًا مِنْ ذَكَرٍ أَوْ أُنْثَى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُ حَيَاةً طَيِّبَةً وَلَنَجْزِيَنَّهُمْ أَجْرَهُمْ بِأَحْسَنِ مَا كَانُوا يَعْمَلُونَ

ஆணாயினும் பெண்ணாயினும் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட நிலையில் நற்செயல் புரிபவராக இருந்தால் நாம் அவரை நல்வாழ்வு வாழச் செய்வோம். அவர்கள் செய்துகொண்டிருந்த நற்செயல்களுக்கான கூலியை நிச்சயம் நாம் வழங்கிடுவோம். *(குர்ஆன் 16:97)*

ஈமானும் நற்செயல்களும் இவ்வுலகில் நிம்மதியான வாழ்வைப் பெற்றுத் தருவதோடு மறுவுலகில் நற்கூலியையும் பெற்றுத்தரும் என்று அல்லாஹ் வாக்களிக்கிறான். இதற்கான காரணம் மிகத் தெளிவானது, நற்செயல்களின் பக்கம் நம்பிக்கையாளர்களைத் தூண்டும் உண்மையான ஈமான் நிம்மதிக்கான காரணிகளைத் தன்னுள் அடக்கியுள்ளது.

1. இன்பம் மற்றும் துன்பத்தின்போது நடந்துகொள்ளும் முறை

அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர் தமது இரட்சகனின் அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துகிறார். அவற்றை நல்லமுறையில் பயன்படுத்துகிறார். அதன் காரணமாக அவருக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. நன்றிசெலுத்துவதால் நன்மை கிடைப்பதோடு அந்த அருட்கொடை நீடிக்கவும் செய்கிறது. துன்பங்களை, கஷ்டங்களை அவரால் இயன்ற அளவு பொறுமையோடு எதிர்கொள்கிறார்.

அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்த்து அவர் மேற்கொள்ளும் அழகிய பொறுமையினால் கஷ்டங்கள் இலகுவாகி விடுகின்றன; துன்பங்கள் கரைந்துவிடுகின்றன. அனுபவத்தையும் ஆன்ம பலத்தையும் அவர் பெறுகிறார். இதைத்தான் நபியவர்கள் பின் வருமாறு கூறுகிறார்கள்:

عَجَبًا لِأَمْرِ الْمُؤْمِنِ، إِنَّ أَمْرَهُ كُلَّهُ خَيْرٌ، وَلَيْسَ ذَاكَ لِأَحَدٍ إِلَّا لِلْمُؤْمِنِ، إِنْ أَصَابَتْهُ سَرَّاءُ شَكَرَ، فَكَانَ خَيْرًا لَهُ، وَإِنْ أَصَابَتْهُ ضَرَّاءُ، صَبَرَ فَكَانَ خَيْرًا لَهُ

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவரின் நிலை ஆச்சரியமானது. அவரது அனைத்து விசயங்களும் அவருக்கு நன்மையாகவே அமைந்துவிடுகின்றன. இந்நிலை அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவருக்குத் தவிர வேறு யாருக்கும் ஏற்படாது. அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் நன்றி செலுத்துகிறார். அது அவருக்கு நன்மையாக அமைந்துவிடுகிறது. அவருக்குத் துன்பம் ஏற்பட்டால் பொறுமையை மேற்கொள்கிறார். அதுவும் அவருக்கு நன்மையாக அமைந்துவிடுகிறது. (அறிவிப்பு: சுஹைப் ﷺ, முஸ்லிம் 2999)

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவருக்கு ஏற்படும் இன்பம், துன்பம் இரண்டுமே அவருக்கு நன்மையாக அமைந்துவிடுகின்றன. இந்த நிலை அல்லாஹ்வை நிராகரித்தவருக்கு இல்லை. இன்பமும், துன்பமும் அவருக்கு வேறு விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. ஆக, ஈமான் மற்றும் நற்செயல்களைப் பொறுத்தே விளைவுகள் அமைகின்றன.

2. அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவரின் நடைமுறை

- அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர், தனக்கு இன்பம் ஏற் பட்டால் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகிறார். இது அவருக்குள் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.
- தனக்கு துன்பம் ஏற்பட்டால், பொறுமையை மேற்கொள் கிறார். இது கவலையையும், துக்கத்தையும், மன அழுத் தத்தையும் போக்கிவிடுகிறது. இவ்வுலகவாழ்வு நிம்மதியாக அமைகிறது.

2

சொல் செயலால் சேவை செய்யுங்கள்

✿

கவலை, துக்கம் மற்றும் பதற்றத்தைப்போக்கும் காரணிகளில் ஒன்று,

- சொல்லாலும், செயலாலும் படைப்புகளுக்கு நன்மை செய்தலாகும்.

இந்தச் செயல்களின் மூலம் நல்லவர், கெட்டவர் என அனைவருக்கும் அல்லாஹ் கவலைகளைப் போக்குகிறான். ஆனால், உளத் தூய்மை, அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தல் ஆகிய பண்புகளின் காரணமாக நம்பிக்கையாளர் பரிபூரணமான பங்கைப் பெறுகிறார். அதனால் நன்மையான காரியங்களை அல்லாஹ் அவருக்கு இலகுபடுத்திவிடுகிறான். அல்லாஹ் கூறுகிறான்:

لَا خَيْرَ فِي كَثِيرٍ مِنْ نَجْوَاهُمْ إِلَّا مَنْ أَمَرَ بِصَدَقَةٍ أَوْ مَعْرُوفٍ أَوْ إِصْلَاحٍ بَيْنَ النَّاسِ وَمَنْ يَفْعَلْ ذَلِكَ ابْتِغَاءَ مَرْضَاتِ اللَّهِ فَسَوْفَ نُؤْتِيهِ أَجْرًا عَظِيمًا

தர்மம் செய்யத் தூண்டுதல், நல்லதை ஏவுதல், மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காகப் பேசப்படும் இரகசியப் பேச்சுகளைத் தவிர அவர்களின் பெரும்பாலான இரகசியப் பேச்சுகளில் எவ்வித நன்மையும் இல்லை. அல்லாஹ்வின் திருப்தியை நாடி அவ்வாறு செய்பவருக்கு நாம் பெரும் கூலியை வழங்கிடுவோம். (குர்ஆன் 4:114)

நன்மை, நன்மைகளைக் கொண்டுவரும்; தீமைகளைத் தடுக்கும். அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்க்கும் நம்பிக்கையாளருக்கு அல்லாஹ் பெரும் கூலியை வழங்கிடுவான். அதாவது, அவருடைய கவலை, துக்கம், கசடுகள் அனைத்தையும் நீக்கிவிடுவான்.

4

நிகழ்காலக் கடமைகளில் கவனத்தைக் குவியுங்கள்

✿

பதற்றத்தை நீக்கி உள்ளத்தைக் கவலைகளிலிருந்து காக்கும் காரணிகளில் ஒன்று,

- இன்றைய நாளின் பணிகளில் மட்டும் கவனத்தைக் குவித்தல், எதிர்காலம் குறித்து சிந்திப்பதையும் கடந்த காலத்தை நினைத்துக் கவலைப்படுவதையும் விட்டுவிடுதல்.

எனவேதான் நபியவர்கள் கவலையிலிருந்தும், துக்கத்திலிருந்தும் பாதுகாவல் தேடினார்கள். கடந்த காலத்தை நினைத்துக் கவலைப் படுவதால் அதனைத் திருப்பிக் கொண்டுவந்துவிடவா முடியும்? எதிர்காலம் குறித்த அச்சத்தால் ஏற்படும் கவலை தீங்கைத்தான் உண்டுபண்ணும். அடியான் இன்றைய நாளின் மகனாகத்தான் இருக்க வேண்டும். தனது முழு முயற்சியையும் இன்றைய நாளுக் காகத்தான் செலவழிக்க வேண்டும். அதனால் அவனது செயல்கள் முழுமையடையும்; கடந்த கால துக்கத்திலிருந்தும், எதிர்காலக் கவலைகளிலிருந்தும் அவனால் ஆறுதல்பெற முடியும். நபியவர்கள் ஏதேனும் பிரார்த்தனை செய்தால் அல்லது தமது சமூகத்தினருக்குப் பிரார்த்தனை புரியுமாறு அறிவுறுத்தினால் அல்லாஹ்விடம் உதவி தேடுவதோடு அதனை அடைவதற்கான வழிமுறைகளையும் மேற்கொள்வார்கள். ஏனெனில், பிரார்த்தனை செயலோடு இணைந்துள்ளது. அடியான் இம்மை மற்றும் மறுமையில் தனக்குப் பயனளிக்கும் விசயங்களுக்காக முயற்சி செய்ய வேண்டும். அதற்காக அல்லாஹ்விடம் உதவிதேட வேண்டும். அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

اِحْرِصْ عَلَى مَا يَنْفَعُكَ وَاسْتَعِنْ بِاللَّهِ وَلاَ تَعْجِزْ وَإِنْ أَصَابَكَ شَيْءٌ فَلاَ تَقُلْ لَوْ أَنِّي فَعَلْتُ كَانَ كَذَا وَكَذَا. وَلَكِنْ قُلْ قَدَرُ اللَّهِ وَمَا شَاءَ فَعَلَ فَإِنَّ لَوْ تَفْتَحُ عَمَلَ الشَّيْطَانِ

‘உனக்குப் பயனளிக்கும் விசயங்களின்மீது ஆசைகொள். அல்லாஹ்விடம் உதவிதேடு. சோர்வடைந்துவிடாதே. ஏதேனும் துன்பம் உன்னைப் பீடித்துவிட்டால் ‘நான் இவ்வாறு செய்திருந்தால், நடந்திருந்தால் இவ்வாறு ஆகியிருக்கும்’ என்றெல்லாம் கூறாதே. ‘அல்லாஹ் நாடிவிட்டான். அவன் நாடியதே நடந்தது’ என்று கூறு. ஏனெனில், ‘ஆல்’ போட்டுப் பேசுவது ஷைத்தானின் செயலைத் திறந்துவிடுகிறது.’ (அறிவிப்பு: அபூ ஹுரைரா ﷺ, முஸ்லிம் 2664)

எல்லாச் சமயங்களிலும்

- அல்லாஹ்விடம் உதவிதேடுதல்,
- பயனுள்ள விசயங்களை ஆசை கொள்ளுதல்,
- சோர்வடையாமல் முயற்சி செய்தல்,
- கடந்தகால விசயங்களை நினைத்து கவலைப்படாமல் இருத்தல்,
- அல்லாஹ் நிர்ணயித்த விதியை ஏற்றுக்கொள்ளுதல்

ஆகிய விசயங்களைத்தாம் நபியவர்கள் வலியுறுத்துகிறார்கள். இங்கு விசயங்களை இரண்டாகப் பிரிக்கிறார்கள்.

- தம்மால் இயன்ற செயல்களை அல்லாஹ்விடம் உதவி தேடியவனாக செய்ய தொடர் முயற்சி எடுக்க வேண்டும்.
- இயலாத விசயங்களை அல்லாஹ்வின் விதி என ஏற்றுக் கொண்டு விட்டுவிட வேண்டும்.

இந்த இரண்டும் கவலைகள், துக்கங்களைப் போக்கி மகிழ்ச்சி மற்றும் நிம்மதியை உண்டாக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

7

உங்களைவிடக் கீழ்நிலையில் உள்ளவர்களைக் கவனியுங்கள்

✿

இது போன்ற சமயங்களில் நபியவர்களின் பின்வரும் அறிவுரை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்:

اُنْظُرُوا إِلَى مَنْ هُوَ أَسْفَلَ مِنْكُمْ، وَلَا تَنْظُرُوا إِلَى مَنْ هُوَ فَوْقَكُمْ، فَهُوَ أَجْدَرُ أَنْ لَا تَزْدَرُوا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ

'உங்களைவிட கீழான நிலையில் உள்ளவர்களைப் பாருங்கள். உங்களைவிட மேலான நிலையில் உள்ளவர்களைப் பார்க்காதீர்கள். உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் அருட்கொடையை சாதாரணமாகக் கருதாமலிருப்பதற்கு அதுவே ஏற்றதாகும்.' (அறிவிப்பு: அபூ ஹுரைரா ﷺ, முஸ்லிம் 2963)

நபியவர்களின் இந்த அறிவுரையை அடியான் தனக்கு முன்னால் வைத்துக்கொண்டால் அவனது உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் கவலை, துக்கம் ஆகியவை அகன்றுவிடும். மகிழ்ச்சியிலும் நன்றியுணர்விலும் அவனது உள்ளம் நிரம்பிவழியும்.

கவனியுங்கள். தன்மீது அல்லாஹ் பொழிந்திருக்கும் வெளிப்படையான, மறைவான அருட்கொடைகளை அடியான் சிந்திக்கும் போதெல்லாம், தன் இறைவன் தனக்கு ஏராளமான அருட்கொடைகளை வழங்கியுள்ளான் என்பதை அறிந்துகொள்வான். நிச்சயமாக இது துக்கங்களையும் கவலைகளையும் அகற்றி மகிழ்ச்சியையும் நிம்மதியையும் ஏற்படுத்துகிறது.

10

எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளுங்கள்

கவலைகளையும், மனஅழுத்தங்களையும் போக்குவதற்கான வழிகளில் ஒன்று,

- அடியான் ஏதேனும் ஒரு துன்பத்தால் பாதிக்கப்பட்டால் அதனை எளிதாக எடுத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

அந்தத் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள மனதைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். கடும் துன்பங்களைத் தாங்கும் அளவுக்கு மனதைப் பழக்கப்படுத்திக் கொண்டால் சிறுசிறு துன்பங்களை அது இலகுவாக எடுத்துக்கொள்ளும். அதற்காக அது கவலைகொள்ளாது. இம்முயற்சியால் அவன் ஏராளமான பலன்களை அடைவதோடு தீங்குகளை விட்டும் தன்னைக் காத்துக்கொள்ள முடியும்.

பயத்திற்கான காரணிகளோ, நோயிற்கான காரணிகளோ அவனை அடைந்துவிட்டால் பல்வேறு வகையான பொருள்களை அவன் விரும்பமாட்டான். மனஅமைதியோடு மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டு அவற்றை எதிர்கொள்வான். கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ள மனதைப் பழக்கப்படுத்திக்கொள்வதால் கஷ்டங்கள் இலகுவாகி அவற்றின் கடினம் நீங்கிவிடுகிறது. அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்து செய்யப்படும் இது போன்ற முயற்சிகளால் சுமைகள் இலகுவாகிவிடுகிறது, கஷ்டங்கள் நீங்கி விடுகிறது. அத்துடன் அடியான் இதன் காரணமாக இம்மையிலும் மறுமையிலும் நன்மையைப் பெறுகிறான். இது அனுபவத்தில் கண்டுணரக்கூடிய ஒன்றுதான். இதற்கான எடுத்துக்காட்டுகள் ஏராளமாக இருக்கின்றன.